

வேலூர் மாவட்டம் காட்பாடி மற்றும் லத்தேரி ரயில் நிலையங்களுக்கு இடையேரூ.29.14கோடியில் சாலை மேம்பாலம் அமைக்கும் பணிக்கு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அடிக்கல் நாட்டி பேசினார். உடன்மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமுலுவிஜயன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் தயாநிதி, மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில்குமார், ஒன்றியக் குழு தலைவர் வேல்முருகன், துணை தலைவர் சரவணன், ஊராட்சி மன்ற தலைவர் சாந்திமணி, சேனூர் முன்னாள் கூட்டுறவு சங்க இயக்குனர் எஸ்.டி.அசோகன், ஒன்றிய கவுன்சிலர் எஸ்.பிரபு, தலைமைக் கழக பேச்சாளர் கண்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் அலுவலகத்தை ஈரோடு சோலார் ரவுண்டானா பகுதியில் கழக இளைஞர் அணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து இந்தப் புதிய அலுவலகத்தில் இருந்து ஈரோடு நாடாளுமன்றத் தொகுதி மக்களுக்காக தொண்டாற்றவுள்ள நாடாளுமன்ற உறுப்பினர், இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ் பணி சிறக்கட்டும் என்று வாழ்த்தினார். அதுபோது அமைச்சர்கள் சு.முத்துசாமி, மு.பெ.சாமிநாதன், மருத்துவர் மதிவேந்தன், கயல்விழி செல்வராஜ் மற்றும் அந்தியூர் செல்வராஜ் எம்.பி., மாவட்டச் செயலாளர் என்.நல்லசிவம், சட்டமன்ற உறுப்பினர், கழக முன்னணியினர் உடனிருந்தனர்.

### எடப்பாடி பழனிச்சாமிக்கு உண்மை நிலை தெரியவில்லை!

# திருமூர்த்தி அணைக்கு விரைவில் தண்ணீர் திறக்கப்படுகிறது!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அறிக்கை!



திருப்பூர், ஆக.4-

பரம்பிக்குளம் ஆழியாற்றிலிருந்து காண்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணைக்கு பாசனத்திற்காக ஆகஸ்ட் முதல் வாரத்தில் தண்ணீர் திறக்கப்பட விருக்கிறது என்று நீர்வளத்துறை அறிக்கை அளித்த பிறகும் எடப்பாடி பழனிச்சாமி உண்மை நிலை தெரியாமல் அறிக்கை வெளியிட்டுள்ளார் என்று அமைச்சர் மு.பெ.சாமிநாதன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அறிக்கை வருமாறு :-

கொங்கு மண்டலத்தில் பிரதானப் பாசனமாக விளங்கி வரும் பரம்பிக்குளம் - ஆழியாறு திட்டத்தில் திருமூர்த்தி அணையின் தண்ணீர் மூலம் சுமார் 4.00 லட்சம் ஏக்கர் பாசன வசதி பெற்று வருகிறது.

பரம்பிக்குளம் அணையிலிருந்து திறந்து விடப்படும் தண்ணீர் சர்க்கார்பதியை அடைந்து மின் உற்பத்தி செய்யப்பட்டு அங்கிருந்து துவங்கும், சுமார் 50 கிலோமீட்டர் நீளமுள்ள சமமட்ட கால்வாய் மூலம் திருமூர்த்தி அணைக்கு நீர் கொண்டு வரப்படுகிறது.

பல ஆண்டுகளாக பராமரிப்பு நிதி ஒதுக்காத காரணத்தினால் சேதமடைந்த சமமட்ட கால்வாயை சீரமைக்க முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு சென்றேன். கடந்த 2010ம் ஆண்டு கழக ஆட்சியில் அரசாணை எண் : 342/ PW(Q1) Dept. நாள்: 29.11.2010ன் படி ரூ.184 கோடி மதிப்பில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு சேதமுற்ற காண்டூர் கால்வாய் பகுதிகளில் சீரமைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இக்கால்வாய் சீரமைப்புப் பணிக்கு முன்னர் சர்க்கார்பதியிலிருந்து சுமார் 1,200 கனஅடி நீர் சமமட்ட கால்வாயில் திறந்து விடும்போது திருமூர்த்தி அணைக்கு சுமார் 600 கன அடி மட்டுமே வந்து கொண்டிருந்தது. கால்வாய் சீரமைப்புக்குப் பின்னர் குறைந்த பட்சம் சுமார் 1,000 கனஅடி திருமூர்த்தி அணைக்கு வந்து சேர்கிறது.

**கால்வாய் சீரமைக்காத அ.தி.மு.க. அரசு!**

கடந்த அ.தி.மு.க ஆட்சியில் 10 ஆண்டுகளில் (2011-2021) சமமட்ட கால்வாய் தொடர்ந்து பராமரிப்புப் பணிக்குப் போதுமான அக்கறை செலுத்தாத காரணத்தாலும், இயற்கைச் சீற்றங்களால் சேதமுற்ற கால்வாய் பகுதிகளையும் சீரமைக்க அவசியம் ஏற்பட்டது. இப்பகுதிகளைச் சீரமைக்கும் பொருட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கித் தந்தார்கள். இந்த ஆண்டு குடிநீர்த் தட்டுப்பாடு அதிகமாக இருந்ததாலும் கடந்த மே மாதம் வரை கால்வாயில் தண்ணீர் எடுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டதாலும் பராமரிப்புப் பணிகள் அதன் பின்னர் ஆரம்பிக்கப்பட்டு போர்க்கால அடிப்படையில் பணிகள் நடைபெற்று வருகிறது.

பாசனத்திற்கு அவசர நிலை கருதி ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் பரம்பிக்குளம் ஆழியாறிலிருந்து காண்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் திறக்கப்பட உள்ளதாக நீர்வளத்துறை அலுவலர்கள் தெரிவித்துள்ளார்கள்.

எனவே தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்திலிருந்து திருமூர்த்தி அணைக்கு பாசனத்திற்கு நீர் திறப்பது காலதாமதமாகிறது என்று யாரோ சொன்ன தவறான தகவலை வைத்து அறிக்கை வெளியிட்டுள்ளார். கடந்த அ.தி.மு.க ஆட்சியில் 10 ஆண்டுகளில் இத்துறைக்கு அமைச்சராகவும், அதில் நான்கு ஆண்டுகள் முதலமைச்சர் பதவியிலுமிருந்தவர் இவ்வாறு அறிக்கை விடுவது வேடிக்கையாக இருக்கிறது.

இவ்வாறு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### தமிழ்நாட்டில் கடந்த 3 ஆண்டுகளில்

# 7000க்கும் மேற்பட்ட புத்தொழில் நிறுவனங்கள் தொடக்கம்!

## தமிழ்நாடு அரசு தகவல்!

சென்னை, ஆக. 4-

தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், புத்தொழில் நிறுவனங்களுக்கு உகந்த சூழலைக் கட்டமைத்து அதிக எண்ணிக்கையில் புத்தொழில்களை உருவாக்க தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக கூறப்பட்டுள்ளது. அதன்படி, தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கை 20.9.2023 அன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் வெளியிடப்பட்டது.

மேலும், புத்தொழில் ஆதார மானிய நிதி மற்றும் தமிழ்நாடு பட்டியலினத்தவர், பழங்குடியினர் புத்தொழில் நிதி உள்ளிட்ட திட்டங்களின் மூலம் புத்தொழில் நிறுவனங்களுக்கு மானியம் வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக தமிழ்நாட்டில் புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும், 2021 ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 32 என்ற அளவில் இருந்த நிலையில், தற்போது இந்த எண்ணிக்கை 9 ஆயிரத்தை தாண்டி உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 3 ஆண்டில் மட்டும் 7006 புத்தொழில் நிறுவனங்கள் புதிதாக தொடங்கப்பட்டுள்ளதாகவும், மகளிர் புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 2021ம் ஆண்டில் 966ஆக இருந்ததாகவும், தற்போது மூன்று மடங்குக்கும் மேல் அதிகரித்து 4 ஆயிரத்து 446 ஆக உயர்ந்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. இதன் காரணமாக, புத்தொழில் நிறுவனங்களுக்கு உகந்த சூழலை கட்டமைத்து செயல்படும் மாநிலங்களின் பட்டியலில் தமிழகம் முதல் நிலையை பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### ஆகஸ்ட் -7 முத்தமிழறிஞர் கலைஞர் 6-ஆம் ஆண்டு நினைவு நாள்!

# மதுரை மாநகர் மாவட்டத்தில் அமைதிப் பேரணி!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிக்கை!



மதுரை, ஆக. 4-

மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கலை - இலக்கியம் - அரசியல் - பொதுவாழ்வு என தொட்ட அனைத்துத் துறைகளிலும் வெற்றிகரமான பல சாதனைகள் படைத்திட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் “6-ஆம் ஆண்டு நினைவு நாள்” 07.08.2024 புதன்கிழமை அன்று காலை 8.30- மணிக்கு மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. தலைமையில் வடக்கு மாசி வீதி - மேல மாசி வீதி சந்திப்பில் இருந்து அமைதிப் பேரணி புறப்பட்டு சிம்மக்கல்லில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பாக மலர் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட உள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள், ஒன்றிய - பேரூர் கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

குறிப்பு : முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு வட்ட கழகங்கள் மற்றும் கிளை கழகங்கள் தோறும் மாலை அணிவித்து மரியாதை செலுத்த வேண்டுகிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குமரி மணிமாறன்
### ஆகஸ்ட் 4 (2021)



தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

தலைமைக் கழகப் பேச்சாளரான இவர், தமிழகம் முழுவதும் கழகக் கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்த்திடும் வகையில் பணியாற்றினார்.

முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் ஆகியோரின் பணிகளைப் போற்றும் வகையில் இரண்டு நூல்களை வெளியிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சங்ககிரி வி. முத்து
### ஆகஸ்ட் 4 (2016)



சங்ககிரி பகுதியில் கழகம் வளர்த்தவர்களில் இவரும் ஒருவர்.

ஒன்றுபட்ட சேலம் மாவட்டப் பிரதிநிதியாகவும் – மாவட்ட துணைச் செயலாளராகவும் – நாமக்கல் மாவட்ட துணைச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

1971, 1996 ஆகிய இரண்டு முறை சங்ககிரி தொகுதியில் கழகத்தின் சார்பில் சட்டமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, தொகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**